சுருக்கம்

பொங்கல் திருநாள் 2021 – அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கம் ரூபாய் 2,500/– வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (டி1) துறை

அரசு ஆணை (2டி) எண். 67

நாள் 21.12.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, மார்கழி மாதம் 6ம் நாள்

படிக்க:

1. அரசு ஆணை (2டி) எண்.66, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 26.11.2019.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண். 975, நாள் 19.12.2020.

3. உணவுப்பொருள்துதுவழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அவர்களின் கடிதம் எண். நக. இ3/ 26669/ 2020, நாள் 19.12.2020.

4. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கடிதம் எண். நக. வர்த்8/38250/2020, நாள் 19.12.2020

---

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையின் படி தமிழக மக்கள் பொங்கல் 2020–ஐ மகிழ்ச்சியுடன் கொண்டாட ஏதுவாக அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பச்சிரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ, இரண்டடி நீள கரும்புத் துண்டு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கம் ரூ.1,000/– வழங்க ரூ.2,363.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு செய்தி வெளியீட்டின்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை அறிவித்தார்கள்:

" தமிழர்களின் திருநாளும் தைத் திருநாள் வரவிருக்கிறது. தமிழர்களின் திருநாளே தைப் பொங்கல் தான். அந்த தைப் பொங்கலை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் அரசு பொங்கல் பரிசு அறிவித்து வழங்கி வருகிறது. இந்த ஆண்டை பொறுத்தவரைக்கும், கொரோனா வைரஸ் தொற்று பரவல் ஏற்பட்டு பலருக்கு வேலை வாய்ப்பு இல்லாத சூழ்நிலை, டெல்டா பகுதிகளிலே புயலினால் கடுமையான மழை, அங்கே தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் கொரோனாவால் வேலை இழந்திருக்கின்ற சூழ்நிலை, புயலால், கன மழையால் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கின்ற சூழ்நிலை ஆகிய இரண்டும் இந்த ஆண்டை பாதித்திருக்கிறது. இதையெல்லாம் அரசு கருத்திற்கொண்டு, இன்றைக்கு தைப் பொங்கலை தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை தமிழர்களும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் உள்ள 2 கோடியே 6 லட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் ரூபாய் 2,500/– நிதியுதவி வழங்கப்படும். 2021–ஆம் ஆண்டு ஜனவரி 4–ஆம் தேதியிலிருந்து அமல்படுத்தப்படும். அத்துடன், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு துண்டு கரும்புக்கு பதிலாக ஒரு முழு கரும்பு, 20கிராம் உலர் திராட்சை, 20 கிராம் முந்திரி, 5 கிராம் ஏலக்காய், ஒரு நல்ல துணிப்பை ஆகியவை கொடுக்கப்படும் ".

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்கள், கடந்த மார்ச் 2020 முதல் கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக பலருக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் பொது மக்கள் வேலைவாய்ப்புகள் இன்றி அவர்களது வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு படிப்படியாக தளர்வுகள் வழங்கி வந்தாலும் மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாக மீட்டெடுக்கப்படாத நிலையில் ஏழை எளிய நடுத்தர குடும்பங்கள் வாழ்வாதாரம் தொடர்ந்து பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் நிவர் புயல் மற்றும் புரெவி புயல் காரணமாக தமிழக மக்கள் அனைவரும் குறிப்பாக டெல்டா பகுதி, கடலோர மாவட்டங்களில் உள்ள மக்கள், மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களும் மேலும் பல மாவட்டங்களில் உள்ள மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா பெருந்தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை விரைவாக மீட்டெடுக்க உரிய பரிந்துரைகளை வழங்க அமைக்கப்பட்ட டாக்டர் ரங்கராஜன் தலைமையிலான குழுவும் தனது பரிந்துரையில் வாழ்வாதாரம் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மேலும் ஒரு தவணை நிதி உதவி வழங்க பரிந்துரைத்துள்ளது என தெரிவித்துள்ளார். மேலும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் தனது கடிதத்தில் 19.12.2020 வரை நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் விவரத்தினை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

| நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளின் விவரம் (as on 19.12.2020) | |
|---|---|
| PHH (including OAP & ANP) | 93,27,499 |
| PHH AAY | 18,64,042 |
| NPHH | 94,24,264 |
| **மொத்தம்** | **2,06,15,805** |
| இலங்கை தமிழர்கள் | 18,923 |
| அரிசி அட்டைகளாக மாற்றம் செய்யக்கூடிய சர்க்கரை அட்டைகள் | 3,75,235 |
| **ஆக மொத்தம்** | **2,10,09,963** |

இந்த குடும்ப அட்டைகள் எண்ணிக்கை 19.12.2020 தேதியன்று கணக்கீடு செய்யப்பட்டதாகும். தற்போது சர்க்கரை அட்டை (NPHH-S) யிலிருந்து அரிசி அட்டையாக மாற்றம் செய்யக் கோரி 19.12.2020 முடிய 1,86,137 கோரிக்கைகள் பெறப்பட்டு 1,64,083 விண்ணப்பங்கள் அரிசி அட்டையாக வகை மாற்றம் செய்யப்பட்டது. 20.12.2020 முடிய கால அவகாசம் உள்ள நிலையில், மீதமுள்ள கோரிக்கைகளின்படி அரிசி அட்டையாக வகை மாற்றம் செய்யும் போது அந்த அட்டைதாரர்களுக்கும் பரிசுத் தொகுப்பு மற்றும் பரிசுத் தொகை வழங்க வேண்டிய நிலையில் மேற்குறிப்பிட்ட நிகர செலவினத் தொகை ரூ.5,504.76 கோடியிலிருந்து கூடுதலாக சுமார் ரூ.95 கோடி முதல் ரூ.100 கோடி வரை உயர வாய்ப்புள்ளது எனவும் தமிழக அரசு 3,75,235 எண்ணிக்கையிலான சர்க்கரை குடும்ப அட்டைகளை அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்ய 20.12.2020 வரை கால அவகாசம் அளித்துள்ளது. அவ்வாறு மாற்றம் செய்யும் பட்சத்தில் செலவினத் தொகை ரூ.5,604.84 (ரூ.5,504.77+ரூ.100.07) கோடியாக அதிகரிக்கக்கூடும் எனவும் தற்போது பொது விநியோகத் திட்டத்தில் அரி பெறும் அட்டைதாரர்களாகிய முன்னுரிமை மற்றும் முன்னுரிமையற்ற அரிசி அட்டைதாரர்கள், அன்னபூர்ணா மற்றும் முதியோர் ஓய்வூதிய திட்ட பயனாளிகள் மற்றும் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர் குடும்பங்களுக்கு மேற்குறிப்பிட்டவாறு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்புடன், 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் நல்ல துணிப்பை மற்றும் ரொக்கத் தொகை ரூ.2,500/- நிதியுதவியுடன் வழங்க உத்தேச செலவின விவரத்தினை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

| விபரம் | குடும்ப அட்டைதாரர்–களின் எண்ணிக்கை | தேவைப்படும் பொருளின் அளவு (மெ.டன் / எண்ணம் / பாக்கெட்) | விலை (மெ.டன் எண்ணம் / பாக்கெட்) | மொத்த தொகை ரூ | தொகை (கோடியில்) |
|---|---|---|---|---|---|
| பச்சரிசி | 20634728 | 20635 | 22500.00 | 464287500.00 | 46.43 |
| சர்க்கரை | 20634728 | 20635 | 46250.00 | 954368750.00 | 95.44 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழு நீள கரும்பு (தோராயமாக 5 அடி நீளம்) போக்குவரத்து செலவு உட்பட | 20634728 | 20634728 | 30.00 | 619041840.00 | 61.90 |
| முந்திரி, திராட்சை, ஏலக்காய் (போக்குவரத்து செலவு உட்பட) | 20634728 | 20634728 | 45.00 | 928562760.00 | 92.86 |
| துணிப் பை (எண்ணிக்கையில்) (140gsm, துணிப்பை எடை 38 கிராம்) | 20634728 | 20634728 | 23.00 | 474598744.00 | 47.46 |
| ரொக்கப் பரிசு | 20634728 | 20634728 | 2500.00 | 51586820000.00 | 5158.68 |
| அரிசி அட்டைகளாக மாற்றம் செய்யக்கூடிய சர்க்கரை அட்டைகள் | 375235 | 375235 | 2666.75 | 1000657936.25 | 100.07 |
| இதர செலவினம் | | | | 20000000.00 | 2.00 |
| **மொத்தம்** | | | | **56048337530.25** | **5604.84** |

எனவே 19.12.2020 வரை நடைமுறையில் உள்ள அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தற்போது தமிழக முகாம்களில் வசிக்கும் 18,923 இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும் விண்ணப்பித்துள்ள அனைத்து சர்க்கரை குடும்ப அட்டைகளை (375235) அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்பவர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத் தொகை வழங்குவதற்கு ரூ.5,604.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. பார்வை நான்கில் காணும் கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் கீழ்க்கண்ட இனங்களின் மீது ஆணை வேண்டி அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

- ➢ பச்சரிசி, சர்க்கரை மற்றும் துணிப்பை ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு கொள்முதல் செய்யவும், அதனை அரசு நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி அட்டைதாரர்கள் மற்றும் மாநில அரசின் உத்தரவின்படி சர்க்கரை அட்டையிலிருந்து அரிசி அட்டைகளாக மாற்றம் செய்யப்படும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் விநியோகம் செய்திட.
- ➢ முழு கரும்பினை கொள்முதல் செய்திட தேவையான விலையினை நிர்ணயம் செய்திடவும் மற்றும் விநியோகம் செய்திடவும் மாவட்ட ஆட்சியர் தலைமையில், சம்பந்தப்பட்ட மாவட்ட இணைப் பதிவாளர் (கூட்டுறவுத் துறை), மாவட்ட வேளாண்துறை இணை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் உள்ளடக்கிய குழு அமைத்திட.
- ➢ முந்திரி–20 கிராம், உலர் திராட்சை–20 கிராம் மற்றும் ஏலக்காய்–5 கிராம் உள்ளடக்கிய தொகுப்பினை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மூலம் வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்து அரசு நியாய விலைக் கடைகளின் மூலம் பயனாளிகளுக்கு வழங்கிட வேண்டியும்.

எனவே 19.12.2020 வரை நடைமுறையில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் தற்போது தமிழக முகாம்களில் வசிக்கும் 18,923 இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும், சர்க்கரை குடும்ப அட்டைகளை (3,75,235) அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்பவர்களுக்கும் ஆகமொத்தம் 21009963 குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத் தொகை வழங்குவதற்கு ரூ.5604.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்திட அரசிடம் ஆணை வேண்டியுள்ளார்.

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியோரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:

I. பொங்கல் 2021 பண்டிகையை முன்னிட்டு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் அகதிகளுக்கும் ரொக்கமாக ரூ.2,500/– ( ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) நிதியுதவி மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பு பச்சரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ ஒரு முழு கரும்பு (தோராயமாக 5 அடி நீளம்) 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர் திராட்சை, 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய துணிப்பை (140 gsm எடை 38 கிராம்) பொங்கல் பரிசு தொகுப்பாக நியாய விலைக் கடைகள் மூலமாக 04.01.2021 முதல் வழங்கப்படும்.

II. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது பொங்கல் பண்டிகை 2021 முன்னிட்டு போதிய அளவில் பச்சரிசி, சர்க்கரை மற்றும் துணிப்பை (140 gsm எடை 38 கிராம்) ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கும், விநியோகம் செய்வதற்கு மற்றும் ரொக்கம் ரூ.2,500/– நிதியுதவி ஆகியவற்றை விநியோகம் செய்யவும் ஒருங்கிணைப்பாளராக செயல்பட நியமிக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்கூட்டியே ரொக்கப்பணம் விடுவிக்கும்.

III. பொங்கல் 2021 பண்டிகையை முன்னிட்டு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் அகதிகளுக்கும் ரொக்கமாக ரூ.2,500/– (ரூபாய் இரண்டு ஆயிரத்து ஐநூறு மட்டும்) நிதியுதவி மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பு ஆகியவற்றை முன்கூட்டியே விநியோகம் செய்து நிறைவேற்றுவதற்கு அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக) முற்றிலும் பொறுப்பாவார்கள். பொங்கல் பண்டிகை 2021 முன்னிட்டு, சென்னை மாவட்டத்தை பொறுத்தமட்டில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் அவர்கள், சென்னை மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், வடக்கு மற்றும் தெற்கு பகுதி உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துணை ஆணையாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு முதுநிலை மண்டல மேலாளர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் அகதிகளுக்கும் ரொக்கமாக ரூ.2,500/– (ரூபாய் இரண்டு ஆயிரத்து ஐநூறு மட்டும்)

மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் முன்கூட்டியே வழங்குவதற்கு முழு பொறுப்பாவார்.

IV. முழு கரும்பினை கொள்முதல் செய்வது குறித்து முடிவெடுப்பது மற்றும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் ஆகியோர்கள் உள்ளடக்கிய குழு அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது.

V. முந்திரி 20 கிராம், உலர் திராட்சை 20 கிராம் மற்றும் ஏலக்காய் 5 கிராம் உள்ளடக்கிய தொகுப்பினை வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்து நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கிட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

VI. பொங்கல் பண்டிகை 2021–ஐ முன்னிட்டு, ரொக்கம் ரூ.2,500 நிதியுதவி மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பு ஆகியவற்றை பெற்று வழங்குவதற்காக, மொத்தம் ரூபாய் 5604.84 கோடியினை (ரூபாய் ஐந்து ஆயிரத்து அறுநூற்று நான்கு கோடியே எண்பத்து நான்கு இலட்சம்) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

VII. சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொங்கல் பண்டிகை 2021–ஐ முன்னிட்டு வழங்கப்படும் ரொக்கப்பணம் ரூ.2,500/– நிதியுதவியை முன்கூட்டியே ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 5 (VI)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத்தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

"3456 – 00 – நுகர்பொருள் வழங்கல் 103 – நுகர்வோர் உதவித் தொகைகள் – மாநிலச் செலவினங்கள் – AE – பொது விநியோக முறை உதவியுடன் சமூகப் பாதுகாப்பு – உணவு உத்திரவாதம் 311 – மானியங்கள் 02 – பொதுவான மானியம்".

த.தொ.கு. (3456 – 00 – 103 – AE – 31102) IFHRMS

பழைய (த.தொ.கு. 3456 – 00 – 103 – AE – 11 23)

7. மேலே பத்தி 5 (VI)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2020–21ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2020–21ஆம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5 (VI)-ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிருவாக இயக்குநருக்கு பெற்று வழங்கிட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 5 (VI)-ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2020–21ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு

விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (கூ,உ(ம) நு பா / வ.செ.பொ –1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் (அ.சா.கு.எண் 370/நிதி துசெ (வசெ)/2020, நாள் 21.12.2020 மற்றும் கூடுதல் அனுமதி பேரேடு எண் 1182 (ஆயிரத்து நூற்று எண்பத்தி இரண்டு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை – 600 005.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை –600 010.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 600 010.
சர்க்கரை ஆணையாளர், 690, அண்ணாசாலை, நந்தனம், சென்னை-600035.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
கூடுதல் பதிவாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்), கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், சென்னை – 600 010.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர் ( தணிக்கை), சென்னை– 600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 005.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001.

**நகல் :**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்-II, சென்னை – 600 009.
மாண்புமிகு துணைமுதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை – 600 009.
பொது(ம.வா) துறை, சென்னை–600 009.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர், சென்னை – 600 009.

நிதித்(B.Coord/BG.I/BG.II/CF&CP/L&A Cell) துறை,
சென்னை – 600 009.
தேசியத் தகவல் மையம், சென்னை-600 009.
இ.கோப்பு/ உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கா. விஜயராஜன்
2/12.2020
பிரிவு அலுவலர்